**செ.வெ.எண்: 81 / மார்ச் /2020** **நாள்: 27.03.2020**

**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி ஆகியோர் இன்று (27.03.2020) ஆய்வு செய்தனர்.**

-------------

**கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு செய்து செய்தியாளர்களிடம் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைச்சர் பெருமக்களுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். அதன் படி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. உலக அளவில் கொடிய அச்சுறுத்தலாக இந்த நோய் உள்ளது.

சீனாவில் வுஹான் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு 195 உலக நாடுகளில் முக்கிய காரணியாக மனிதர்களை தாக்கும் என்பது கசப்பான உண்மை. இந்திய நாட்டிலும், கொரோனா வைரஸ் நோய் தாக்கம் தொடர்பாக மக்கள் எவ்வாறு தற்காத்துக் கொள்ள வேண்டும் என பாரதபிரதமர் அவர்கள் அனைத்து மாநில முதல்வர்களுடன் ஆலோசனை நடத்தினார். அதன்படி நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் இருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தமிழகம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி மவாட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. 01.03.2020க்கு பிறகு நடவடிக்கைகள் மிகவும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

<u>**திருச்சிராப்பள்ளி மாவட்ட கட்டுப்பாட்டு மையம் :**</u>

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் 24மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண், 0431-2418995 மற்றும் 99523 81108 என்ற கைபேசி எண்ணிலும் **collrtry.gsec@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமும் பொதுமக்கள் தங்களது புகார்களை தெரிவிக்கலாம்.

மருத்துவர், செவிலியர், சுகாதார அலுவலர் மற்றும் ஆலோசகர் ஆகியோர்கள் அடங்கிய குழு பொதுமக்களிடமிருந்து வரப்பெறுகின்ற புகார்களை கேட்டு உரிய தீர்வுகளை வழங்குகின்றனர்.

இதுவரை பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற 195 புகார்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

<u>**தனிமைப்படுத்தப்பட்ட மையம் (Quarantined Center) :**</u>

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், திருச்சி மதுரை சாலையில் கள்ளிக்குடி கிராமத்தில் உள்ள கனிகள் மற்றும் காய்கறிகள் விற்பனை வளாகம் தனிமைப்படுத்தப்பட்ட மையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இதுவரை 78 ஆண்கள், 34 பெண்கள் உட்பட 112 பயணிகளுக்கு இங்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

112 பயணிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த பயணிகள் 23 நபர்கள் ஆவர். இவர்கள் சுகாதாரத்துறை அலுவலர்களால் வீட்டுக்கண்காணிப்பில் உள்ளனர்.

**தனிமைப்படுத்தப்பட்ட வார்டு (Isolated Ward) :**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்ட வார்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

22.03.2020 அன்று துபாயிலிருந்து 86 பயணிகளுடன் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் தரையிறங்கிய ஏர் இந்தியா விமானத்தில் பயணம் செய்த ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பயணிக்கு அதிகமான காய்ச்சல் மற்றும் இருமல் இருந்ததால் 22.03.2020 அன்றே தனிமைப்படுத்தப்பட்ட வார்டில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை மற்றும் கண்காணிப்பில் உள்ளார். இவருக்கு கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என மருத்துவ பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் தொடர்ந்து மருத்துவரின் கண்காணிப்பில் உள்ளார்.

இவ்விமானத்தில் பயணம் செய்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த மற்ற 8 பயணிகளும் வீட்டுத்தனிமையில் (Home Quarantine) உள்ளார்கள். சுகாதாரத்துறை அலுவலர்களால் இவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

**வீட்டுத்தனிமை (Home Quarantine) :**

01.03.2020 முதல் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு பல்வேறு நாடுகள் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து வந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த 4120 பயணிகள் பட்டியல் தற்போது தயாரிக்கப்பட்டது. இவர்களின் வீடுகளில் **"தனிமைப்படுத்தப்பட்ட வீடு"** என்ற ஸ்டிக்கர் ஒட்டும் பணிகள் நடைபெற்றுவருகிறது. இதுவரை 2262 வீடுகளில் ஸ்டிக்கர் ஒட்டும் பணி முடிவடைந்தது. எஞ்சியுள்ள 1498 வீடுகளுக்கு ஸ்டிக்கர் ஒட்டும் பணி இன்று (27.03.2020) முடிவடையும். இவர்கள் அனைவரும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட நபர் அரசின் விதிமுறைகளைப் பின்பற்றாமல் வெளியே நடமாடினால் அவர்களது பாஸ்போர்ட் முடக்கப்பட்டு குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சமுதாய உணவகம் :**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மொத்தம் 36 இடங்களில் சமுதாய கூடம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | இடம் | சமுதாய கூடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சி பகுதி | 3 |
| 2 | நகராட்சி பகுதி | 3 |
| 3 | பேரூராட்சி பகுதி | 16 |
| 4 | ஊராட்சி ஒன்றியங்கள் | 14 |
| | மொத்தம் | 36 |

**கிருமி நாசினி :**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மத்திய பேருந்து நிலையம், சத்திரம் பேருந்து நிலையம், மருத்துவமனைகள், பள்ளி கல்லூரிகள் மற்றும் கோயில்கள் ஆகிய இடங்களில் கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அரசு பேருந்துகள், தனியார் பேருந்துகள், ஆம்னி பேருந்துகள் கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**உழவர் சந்தை :**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 6 உழவர் சந்தைகளும் திறந்தவெளி மைதானத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை நமது மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தாக்கம் சமுதாய தொற்று ஏற்படாமல் உள்ளது. மாவட்ட மக்கள் பாக்கியம் செய்துள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கையே சான்றாக அமைந்துள்ளது. பாரத பிரதமர் அவர்களை மெச்சத்தக்க வகையில் உள்ளது. மக்கள் ஒற்றுமை உணர்வோடு அனைவரும் **விழித்திருந்து விலகி இருந்து, வீட்டிலேயே இருக்க வேண்டும்** என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்டத்தில் தற்போது வாழை அறுவடை நடைபெறுவதால் வாகனங்களில் வாழைக்காய் ஏற்றி வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில் அனைத்து தொகுதிகளிலும், இரு அமைச்சர்களும் சுற்றி வந்தோம். குறிப்பாக காந்தி மார்க்கெட், எடத்தெரு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி, கிழக்கு, மேற்கு, ஸ்ரீரங்கம் மேலும், பல்வேறு பகுதிகளில் சுற்றிப்பார்த்தோம். மக்கள் சாலைகளில் நடமாட்டம் இல்லை. இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

22.03.2020 துபாயிலிருந்து விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு ஈரோட்டை சேர்ந்த 24 வயது இளைஞர் ஏர் இந்தியா விமானம் மூலம் வந்தார். இந்த விமானத்தில் அவர் 13 சி-யில் அமர்ந்து வந்தார். திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் சுகாதாரத்துறையின் மூலம் பரிசோதனை செய்ததில் லேசான காய்ச்சல், சளி, இருந்ததால் உடனடியாக அவரை திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் கொரோனா வைரஸ் தனி பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். நேற்று அவருக்கு கொரோனா வைரஸ் நோய் தாக்கம் உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டது. தற்போது அவர் நல்ல நிலையில் உள்ளார்.

காந்தி மார்க்கெட் சனி, ஞாயிறு கிழமைகளில் வழக்கம் போல் செயல்படும். வருகின்ற திங்கள் கிழமை(30.03.2020) முதல் ஜீ-கார்னர் இடத்தில் காய்கறி விற்பனை தொடங்கப்படவுள்ளது. இதில் பொதுமக்கள் சென்று காய்கறிகள் வாங்குவதற்கு தடை ஏதும் இல்லை. இதுவரை மாவட்டத்தில் 121 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 11 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. வாகனங்களில் 2 நபர்கள் பயணம் செய்தால் வாகனம் பறிமுதல் செய்யப்படும். இன்று மாலை முதல் காவல் துறையின் நடவடிக்கை கடுமையாக இருக்கும். நமது மாவட்டத்தில் வாழை சாகுபடி அறுவடை தொடங்கியுள்ளதால் வெளி மாநிலங்களுக்கு வாகனங்களில் வாழைக்காய் ஏற்றிச்செல்ல தடை ஏதும் இல்லை. கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தை தடுப்பதற்கு கிருமி நாசினி 4000 லிட்டர் முன்னெச்சரிக்கையாக தயார் நிலையில் உள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள், மாநகர காவல் ஆணையர் திரு.வி.வரதராஜு,இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜியாவுல்ஹக்,இ.கா.ப., முசிறி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.செல்வராஜ், மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.எம்.பரமேஸ்வரி, மாநகராட்சி ஆணையர் திரு.எஸ்.சிவசுப்ரமணியன், இணை இயக்குநர் குடும்பநலம் டாக்டர்.கோபிநாத், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் டாக்டர்.சுப்ரமணி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் திருமதி.வனிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சங்கர், மற்றும் பலர் உடன் உள்ளனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.